மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்து, எல்லாக் கட்சித் தலைவர்களும் எடுத்துரைத்த கருத்துக்களுக்கு, பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய உணர்வுகளை இணைத்துக் கொள்ள விழைகிறேன்.

இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது என்பதைத் தெரிவிக்கும் வகையில் நீங்கள் எல்லாம் கர ஒலி எழுப்பி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(எல்லா உறுப்பினர்களும் கர ஒலி எழுப்பினர்)

தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

6. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது திரு. ஏ. பாலையா அவர்கள் பேசுவார்கள்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

திரு. ஏ. பாலையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தோடு இந்தக் கூட்டத்தை ஒற்றி வைக்கலாம் என்று விரும்புகிறேன். ஏனென்றால், அப்போதுதான் அந்த உணர்ச்சியோடு வெளிக் கிளம்ப முடியும். ஆகவே மற்ற பிரச்சினைகளை நாளைக்கு வைத்துக் கொள்வது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : உறுப்பினர் திரு. திருப்பூர் மொய்தீன் அவர்கள் வேண்டுகோள்படி, பேரவையின் பிற அலுவல்கள் ஒற்றி வைக்கப்படுகின்றன.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

@ 91. 13th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1969--70. [Laid on the Table of the House under section 75 (1A) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]